O.S.No. 33/2022 நாள் 16.07.2026 DW 1 – திரு. பொன்கார்த்திகேயன்

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (வாதிதரப்பில்)

எனக்கு வயது என்னவென்றால் 38 வயது. எனது நிரூபணவாக்குமூலத்தில் 35 வயதுதான் சொல்லியுள்ளேன் என்றால் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்யும்போது 35 வயதுதான்.வாதிகளும், 6 ம் பிரதிவாதியும், என் தகப்பனாரின் உடன் பிறந்த சகோதரிகள் என்ற முறையில் எனக்கு அத்தை என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்கு எந்த தேதியில் திருமணம் ஆகியது என்றும் யார் பேசி முடித்தார்கள் என்றும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்திலும், எதிர்வழக்குரையிலும் வாதிகள் தபசில் சொத்துக்களில் அவர்களது பாகத்தை பொறுத்து வாய்மொழியாக பாக விடுதலை கொடுத்துவிட்டதாக சொல்லியுள்ள சங்கதிகளை பொறுத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதிகள் வழக்கு சொத்தில் அவர்கள் பாகத்தை பொறுத்து வாய்மொழியாக பாக விடுதலை கொடுத்தது கிடையாது என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ–1 ஆவணத்தில் சந்திரபுஷ்பம் என்பவருக்கு நாராயண நாடார், முத்துலெட்சுமி, கிருஷ்ணவடிவு ஆகிய 3 பேர்களும் சேர்ந்து எழுதிக்கொடுத்ததாகத்தான் உள்ளது என்றும், வாதிகள் எழுதிக்கொடுத்ததாக இல்லை என்றாலும் சரிதான். நிரூபணவாக்குமூலத்திலும், முதல்விசாரணையிலும் வாதிகளும் சேர்ந்துதான் பி.வா.சா.ஆ–1 ஆவணத்தை எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ–1 ஆவணத்தில் கடன்களை அடைப்பதற்காகவோ, 6 ம் பிரதிவாதிக்கு திருமணம் செய்து

வைப்பதற்காகவோ சொத்துக்களை விற்றதாக வாசகம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் பி.வா.சா.ஆ−1ல் உள்ள எழுத்துக்கள் எனக்கு புரியவில்லை. பி.வா.சா.ஆ−1ஐ படித்து பார்க்காமலேயே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதை நான் பார்த்தேன், பத்திரத்தில் உள்ள எழுத்துக்கள் சரியாக எனக்கு புடிபடவில்லை. பி.வா.சா.ஆ−1 ஆவணத்தில் கடன்களை அடைப்பதற்காகவோ, 6ம் பிரதிவாதிக்கு திருமணம் செய்து வைப்பதற்காகவோ சொத்துக்களை விற்றதாக வாசகம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதால்தான் அதனை சொல்ல மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நிரூபணவாக்குமூலத்திலும், எதிர்வழக்குரையிலும் கடன் இருந்ததாகவும், வெளிநபர்களிடம் கடன் பெற்றும்தான் 6ம் பிரதிவாதிக்கு எனது தகப்பனார் திருமணம் செய்து வைத்தார் என்று சொல்லியுள்ளநிலையில் எவ்வளவு கடன் இருந்தது என்றும், யார் யாரிடம் கடன் பெற்றார்கள் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கடற்கரையாண்டி, முத்துலெட்சுமி குடும்பத்தினருக்கு எந்தவித கடனும் கிடையாது என்றும், இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தபசில் சொத்துக்கள் எல்லாத்திலும் எனது தகப்பனார், 6ம் பிரதிவாதி எல்லோரும் சேர்ந்து உழைத்துதான் குடும்பம் நடத்தி வந்தார்கள் என்றும், நாங்கள் மட்டும்தான் அனுபவத்தில் இருந்ததாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வாதிகளுக்கும், 6ம் பிரதிவாதிக்கும் எனது தகப்பனார் எந்தவித தொகையும் கொடுத்து திருமணம் செய்து வைக்கவில்லை என்றாலும், எனது பாட்டி முத்துலெட்சுமியின் உதவியுடன்தான் திருமணம் நடந்தது என்றும், வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதிகளுக்கு திருமணம் நடைபெற்ற சமயத்தில் நான் பிறக்கவேயில்லை என்றாலும், அதனால் வாதிகளுக்கு நான் சொல்வதுபோல் திருமணம்

நடந்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதி சந்திரபுஷ்பம் என்ன உறவு என்றால் என் அம்மாவின் அம்மா எனக்கு பாட்டி. இந்த உறவுமுறையை பற்றி எனது நிரூபணவாக்குமூலத்திலும், எதிர்வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை 7ம் பிரதிவாதி வேறு நபர்களுக்கு விற்பனைசெய்துவிட்டார் என்று சொல்லியுள்ளநிலையில் யார் யாருக்கு விற்றுள்ளார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்ன என்ன ஆவணங்கள் மூலமாக விற்றார்கள் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 7ம் பிரதிவாதியும், அவரது குடும்பமும் குடியிருந்து வருவது தாவா சொத்து அமைந்துள்ள ஊரில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–1 எழுதப்படும்போது 6ம் பிரதிவாதி மைனராக இருந்தார் என்பதால் அவரை பொறுத்து பி.வா.சா.ஆ–1 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ–1 ஆவணம் என் அப்பாவால் எனது பாட்டிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டதால் அது பெயரளவிலான ஆவணம் என்பதால் வாதிகளுக்கு அது பற்றி தெரியாது என்றுசொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ–1 ஆவணத்தில் கண்ட சொத்தை 7ம் பிரதிவாதி ஒருபோதும் அனுபவம் செய்தது கிடையாது என்றாலும், எங்களின் தூண்டுதலினால் 7ம் பிரதிவாதியும் அவரது பிள்ளைகளும் தாவா சொத்தில் வாதிகளின் அனுபவத்தை இடைஞ்சல் செய்ததால்தான் இந்த தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றுசொன்னால் சரியல்ல. சொத்துக்களை எனது தகப்பனார் கர்த்தா என்ற முறையில் அனுபவம் செய்து வந்ததாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றாலும், வாதிகள் கேட்டுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் சட்டப்படி கிடைக்கக்கூடியது என்றும்

சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் உண்மையானது அல்ல என்றாலும், போலியாக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (6ம் பிரதிவாதிதரப்பில்)

பி.வா.சா.ஆ–1 ஆவணம் எழுதும்போது 6ம் பிரதிவாதி மைனர் என்பதால் அவரை ஏமாற்றி எனது தகப்பனார் மேற்படி ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் அதனால் அந்த ஆவணம் செல்லாது என்றுசொன்னால் சரியல்ல. அவர் மைனர் கிடையாது. 6ம் பிரதிவாதிக்கு 4ல் ஒரு பாகம் உண்டு அதை பிரித்துக்கொடுக்க சட்டப்படி கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

8,9 பிரதிவாதிகள்தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என சொல்லப்பட்டது.